இருக்கும். அப்படிச் சொல்லிக்கொடுத்தால் தான் மாணவர்கள் ஆதாரக் கல்வியை நன்றாகப் பயிலமுடியும்; அவர்கள் தொழில்களைக் கற்றுக்கொள்ளவும் முடியும்.

ஹரிஜனப் பிள்ளைகளுக்கு "ஸ்காலர்ஷிப்" கொடுக்கப்படுகிறது. பல இடங்களில் பலருக்கு இது கிடைப்பதில்லை. ஹரிஜன மாணவர்கள், உப காரச் சம்பளத்தைப் பெறுவதற்கு முதலில் கிராம மணியக்காரரிடமும் பிறகு தாசில்தாரிடமும் விண்ணப்பத்தில் கையெழுத்து வாங்கவேண்டும். இவர்களிடமிருந்து கையெழுத்தை வாங்கி தலைமை ஆசிரியரிடம் விண்ணப் பத்தை சமர்ப்பித்தாலும் பலருக்கு உபகாரச் சம்பளம் கிடைப்பதில்லை. ஒரு சிலருக்குத்தான் உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. ஆகவே எல் லோருக்கும் உபகாரச்சம்பளம் கிடைக்கச் செய்யும் வகையில் உத்தரவிடு மாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பல குழந்தைகள் படிக்க முடிவதில்லை. அவர்களை பெற் றோர்கள், தானியம் கூலியாகக் கிடைக்கிறது என்பதால் எங்கேயாவது மாடு மேய்க்க அனுப்பி விடுகிறார்கள். வாழ்க்கைத் தரம் குறைவாக இருப்பதால் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக பள்ளிக்கூடங்களில் மத்தியானச் சாப்பாடு போடுவதாக சர்க்கார் சொல் கிறார்கள். இதைச் செய்வதுடன் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஜதை உடை கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால் பெற்றோர்களும் பிள்ளைகளை ஊக்கத்துடன் பள்ளிக்கு அனுப்புவார்கள். இதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ஒரு உபாத்தியாயரிடம் எத்தனை மாணவர்கள் ஒப்படைக்கப்படலாம் என்பதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். ஒரு உபாத்தியாயர் 25—30 பிள்ளைகளை சமாளிப்பதே கஷ்டமானது. ஒருவருக்கு ஆரம்பத்தில் 2—3, குழந்தைகள் இருந்தால் அவைகளை சமாதானப்படுத்துவதே அவருக்குக் கஷ்டமாக இருக்கும். அப்படி இருக்கும்போது ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயரிடம் 30 குழந்தைகள் இருந்தால் அவைகளை சமா தானப்படுத்துவதற்கே 2-மணி நேரம் பிடிக்கும். அதற்கு மேல், பாடம் சொல்லிக்கொடுப்பது மிகவும் கஷ்டமானது. ஆகவே மாணவர்களின் எண்ணிக்கையை எவ்வளவு குறைவாக நிர்ணயிக்க முடியுமோ அவ்வளவு குறைவாக நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் உபாத்தியாயர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட் டிருக்கின்றன. உபாத்தியாயர்களுக்கு உள்ள வீட்டு அலவன்ஸ் ரூ. 7; அவர்களிடமிருந்து கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் குடியிருப்பதற்காக வாங்கப்படும் வாடகை ரூ. 15. சர்க்கார் வாடகை வாங்குவது ரூ. 15-ம் அலவன்ஸ் கொடுப்பது ரூ. 7-மாக இருக்கக்கூடாது. ஆகவே எவ்வளவு அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவே வாடகையாகக் கொடுக்கப் படுவதற்கான உத்தரவை சர்க்கார் போட வேண்டும். உபாத்தியாயர்களின் நிலை இப்படி இருந்தால் அவர்கள் எப்படி மாணவர்களுக்கு நன்றாகப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியும்? அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண் டும். ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்களின் சம்பளம் இப்போது மிக மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய சம்பளம் ரூ. 25 அல்லது ரூ. 30. குறைந்தபட்ச சம்பளம் ரூ. 50-ஆக இருந்தால்தான் உபாத்தியாயர்கள் ஊக்கமாகவும் உற்சாகமாகவும் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். கல்வி சம்பந்தமாகச் சட்டமியற்றும்போது உபாத்தியாயர்களின் சம்பளத்தையும் சர்க்கார் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again tomorrow at 9 a.m.

The House then adjourned.

IX.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

B

20. *Balance Sheet of Radio and Electricals, Limited, Madras.*